

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், அலகுமலை ஊராட்சி, ஸ்ரீ வேலன் மஹாலில் நடைபெற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், பல்லடம் நகரக் கழகச் செயலாளர் ந.ராஜேந்திரகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உகாயனூர் பி.கே.கனகராஜு, பொங்கலூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.பாலுச்சாமி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் மத்திய ஒன்றிய கழக இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு வி.கைகாட்டியில் நடைபெற்ற நான்காண்டு சாதனை விளக்க பிரச்சார பொதுக்கூட்டத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக பேச்சாளர் கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன், இளம் பேச்சாளர் கனிமொழி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் தெய்வ.இளையராஜா, இரா.பாலு, ப.அன்பரசு, எஸ்.ஆர்.முருகேசன், வீர சிவா (எ) சிவகுருநாதன், முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டம் !

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஜூலை 20 –

முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, எஸ்.வி.எஸ்.சீதையம்மாள் திருமண மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், முதலமைச்சர் அவர்கள், மக்களின் குறைகளை வீட்டி ற்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், ஜூலை 15ஆம் தேதி முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். இத்திட்டத்தில், அனைத்து மாவட்டங்களிலும் முதற்கட்டமாக, இன்று முதல் 15.08.2025 வரை 3,563 முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இதில் 1,428 முகாம்கள் நகர்ப்புறங்களிலும், 2,135 முகாம்கள் ஊரகப் பகுதியிலும் நடைபெறும்.

இந்த முகாம்கள் நடைபெறும் பகுதிகளில், இத்திட்டம் குறித்த விழிப்புணர்வுப் பணிகள், விண்ணப்பம் மற்றும் அரசு வழங்கும் சேவைகளைப் பெறத் தேவையான தகுதிகள்/ஆவணங்கள், ஆகிய விவரங்கள் அடங்கிய தகவல் கையேட்டினை வழங்கும் பணியினை தன்னார்வலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்களுடன், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற தகுதியுள்ள, விடுபட்ட பெண்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம் என்ற விவரமும் தன்னார்வலரால் தெரிவிக்கப்படுகிறது. முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகிறது.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இடங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, எஸ்.வி.எஸ். சீதையம்மாள் திருமண மஹாலில், 17 மற்றும் 25 ஆகிய வார்டு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறியப்பட்டது.

அதன்படி இம்முகாமானது, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாநகராட்சி பகுதியில் 29 முகாம்களும், அறந்தாங்கி நகராட்சி பகுதியில் 10 முகாம்களும், பொன்னமராவதி, கறம்பக்குடி, ஆலங்குடி, கீரனூர், கீரமங்கலம், இலுப்பூர், அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய எட்டு பேரூராட்சி பகுதிகளில் தலா இரண்டு வீதம் 16 முகாம்களும், ஊராட்சி பகுதிகளில் 151 முகாம்களும், பெரிய நகரங்களில் 7 முகாம்களும் ஆக மொத்தம் 213 முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடத்தப்பட உள்ளன.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரிவைகைகுண்டாறு) ஆர்.ரம்யா தேவி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ. ஷோபா, வருவாய் கோட்டாட்சியர்கள் பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் அரசு நலத்திட்ட உதவிகளை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். அதனை தொடர்ந்து அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலை சமுதாய கூட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முகாமை பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு பணிகள் குறித்தும், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்தும் சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா , திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில்

# சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகள், கட்டமைப்பு வசதிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

*சென்னை, ஜூலை 20-*

*சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு பணிகள் குறித்தும், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்தும் சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் 18.07.2025 சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாடு மற்றும் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தின் சுற்றுலா வளர்ச்சிப் திட்டப் பணிகள் குறித்து முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், முத்திரைத் திட்டங்கள், பிற அரசுத்துறைகளிடமிருந்து பெற வேண்டிய திட்டப்பணிகள் குறித்த தடையின்மை சான்றுகள் பெறுவது, தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் குறித்தும், புதிய முன்மொழிவுகள் குறித்தும் மற்றும் முடிவுற்ற பணிகள் தற்போதைய நிலை பயன் பாடுகள் குறித்தும், திறப்பு விழாவிற்கு தயாராக இருக்கும் நிறைவடைந்த பணிகளான, தென்காசி மாவட்டம் குண்டாறு அனணையில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா,*

*திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியை பல்வேறு சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல், புதுக்கோட்டை மாவட்டம் முத்துகூடா கடற்கரை மேம்பாட்டுப் பணிகள், திருவள்ளுவர் மாவட்டம் பூண்டி அணை சுற்றுலா மேம்பாட்டு பணிகள், மதுரை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு பிரிவு 2ல் அதிநவீன வசதிகள் கூடிய தங்கும் விடுதி கட்டடம் போன்ற பணிகள் குறித்தும், சுற்றுலாத் தலங்களில் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்தும்*

*சுற்றுலாத்துறை உதவி இயக்குநர், பொறியாளர்கள் மற்றும் அனைத்து சுற்றுலா அலுவலர்களுடனும் கலந்துரையாடல் செய்து, சுற்றுலாப்பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முதற்கொண்டு அனைத்து வகையான சுற்றுலா சேவைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ள படுகிறதா என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.*

*இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.*



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிவிப்பிற்கிணங்க நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை பேரூர் தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தின் கீழ் பாகம் எண் 12 முதல் 21 வரை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் வீடு வீடாகச் சென்று கழகத்தின் நான்காண்டு சாதனையை எடுத்து சொல்லி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சியில் நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், கஜேந்திரன், மணி, சந்தோஷ், வினோத், பூபாலன், கிஷோர் குமார், வினோத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆலோசனையின்படி கோவை அவினாசி சாலையில் அமைந்துள்ள தண்டுமாரியம்மன் திருக்கோவிலில் தமிழ்நாடு அரசு நிதியுதவியில், 'அம்மன் திருக்கோவில்கள் ஆன்மீகப் பயணத்தை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். இதில் கோவை மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் மெட்டல் ராஜாமணி, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், உறுப்பினர்கள் நாகலட்சுமி, வி.லட்சுமணன், ஸ்ரீவத்சன், மனோஜ்குமார், கலைமணி, வட்டக் கழகச் செயலாளர் விஜயகுமார், மாமன்ற உறுப்பினர் சுமா விஜயகுமார், திருக்கோவில் ஆய்வாளர் (வடக்கு) உதயகுமார், திருக்கோவில்கள் செயல் அலுவலர்கள் பேபி ஷாலினி , நாகராஜ், ஜெய் செல்வம், ஹேமலதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.